09.03.2026

O.S.No. 208/2024

DW1- சேசுராஜன் – த/பெ. ஜான்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.03.2026

<u>குறுக்கு விசாரணை :</u> (வாதிகள் தரப்பில்)

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் டெய்லராக உள்ளேன்.

2. என் தகப்பனாரும், தோப்பியாஸ்–ம் சகோதரர்கள் என்றால் சரிதான். மற்றொரு சகோதரர் லூர்து உள்ளார்.

3. தபசில் சொத்தின் பட்டா என் தகப்பனார் பெயரிலும், தோப்பியாஸ் பெயரிலும் உள்ளது என்றால் சரிதான்.

4. தபசில் சொத்திற்கு வடக்கு வாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடமும், தெற்கு பக்கம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடமும் உள்ளது என்றால் சரியல்ல.

5. தபசில் சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள வீட்டை வாதி எப்போது கட்டினார் என்றால் 30 வருடத்திற்கு முன்பு கட்டினார்.

6. தபசில் சொத்தில் நான் 2022ல் வீடு கட்டியதாக கூறியுள்ள நிலையில் அதற்கு முன்பு காலி மனையாக இருந்தது என்றால் சரிதான்.

7. வாதி வீட்டிற்கு மின் இணைப்பு தபசில் சொத்தின் தெற்கு பக்கம் ஒரு கல் நடப்பட்டு அந்த கல் மூலம் வயர் எடுக்கப்பட்டு மின் இணைப்பு தரப்படுகிறது என்றால் சரிதான். பூர்வீக வீடு இருந்ததால் அவ்வாறு எடுத்துவந்தனர்.

8. வாதிகளின் வீட்டில் வடக்கு பக்கம் உள்ள சுவற்றை பராமரிப்பதற்கு தபசில் சொத்தின் வழியாகத்தான் சென்று வரவேண்டும் என்றால் சரியல்ல.

9. தபசில் சொத்தில் நான் வாதிகள் வீட்டின் மேற்கு பக்க சுவரை ஒட்டி வீடு கட்டினேன் என்றால் சரிதான்.

10. மேற்கு பக்கம் உள்ள வாதி வீட்டின் சுவற்றை வெள்ளை அடிப்பதற்கு தபசில் சொத்தின் வழியாகத்தான் செல்லவேண்டும் என்றால் சரியல்ல. அங்கு யாருக்கும் பாதை இல்லை.

11. வழக்கு சொத்து ஜான் மற்றும் தோப்பியாஸ்க்கு பொதுவாக பாத்தியப்பட்டது என்றும் வாதி அவரது வீட்டிற்கு தபசில் சொத்தின் வழியாகத்தான் சென்று வடக்கு மற்றும் மேற்கு பக்க சுவரை பராமரிக்கவேண்டும் என்றும் தபசில் சொத்தின் வழியாகத் தான் நடந்து சென்று வந்து கொண்டிருக்கிறார் என்றும் வாதி வீடு கட்டி 30 வருடத்திற்கு பின் வேண்டுமென்றே வாதிக்கு இடைஞ்சல் தரவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதி சுவற்றை பராமரிக்கவிடாமல் நான் தடை செய்வதால் வாதியின் வழக்கு அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

12. வாதி ஊரில் இல்லாத நேரத்தில் நான் தபசில் சொத்தை ஆக்கிரமித்து கட்டுமானங்கள் கட்டியிருப்பதால் அதை சட்டப்படி அகற்ற கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

13. என் எதிர் வழக்குரையில் கூறிய சங்கதிகள் அனைத்தும் தவறானவை என்பதால் என் கட்சி நிராகரிக்கப்பட்டு வாதியின் வழக்கை அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஒம்/—J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC)
தென்காசி